டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

அக்ரி-டாக்டர்
மின்னிதழில் குறைந்த செலவில்
விளம்பரம்
செய்து பயன்பெற
தொடர்புக்கு
80563 05483 • 93602 23193



agridoctor.in | 20.8.2023 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.11, Issue: 54 - Madurai | Online Edition

# தமிழ்நாட்டில் 25ம் தேதி வரை மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஆக.19

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் வரும் 25ம் தேதி வரை இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நாளை மற்றும் நாளை மறுநாள் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

23ம் தேதி தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதி களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 24 மற்றும் 25ம் தேதி களில் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைப் பொறுத்தமட்டில், அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப் படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 37 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

மீனவர்களைப் பொறுத்தமட்டில், இன்று தென்தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# மேகாலயாவின் அன்னாசிப்பழங்களுக்கு உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் உரிய அங்கீகாரம்

# மகிழ்ச்சி அளிக்கிறது பிரதமர் மோடி

புது தில்லி, ஆக.19

மேகாலயாவின் அன்னாசிப்பழங்களுக்கு உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் உரிய அங்கீகாரம் கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள தில்லி சந்தையில் அன்னாசிப் பழத் திருவிழா குறித்து மேகாலயா முதலமைச்சர் கே.சங்மாவின் எக்ஸ் பதிவுக்கு பதிலளித்துப் பிரதமர், 'மேகாலயாவின் அன்னாசிப் பழங்களுக்கு உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் உரிய அங்கீகாரம் கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இத்தகைய முயற்சிகள் நமது பன்முக விவசாயப் பாரம் பரியத்தைக் கொண்டாடுவதோடு மட்டுமின்றி, நமது விவசாயி களுக்கு அதிகாரமளிக்கின்றன' என தெரிவித்துள்ளார்.

# அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண் மாணவர்களின் மருத்துவ முகாம்



கடலூர், ஆக.19

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இளங்கலை வேளாண்மை இறுதியாண்டு பயிலும் மாணவர்கள் (குழு – B3) 14 பேர் புவனகிரி அடுத்த பெரு மாத்தூர் கிராமத்தில் முனைவர் B.சுதாகர் தலைமையில் தங்கி பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், உலக குடற்புழு தினத்தை முன்னிட்டு ஊராட்சி ஒன்றிய பெண்கள் நடுநிலைப்பள்ளியில் பயிலும் மாணவிகளுக்கு அல்பெண்டாசோல் குடற்புழு நீக்க மாத்திரையை மருத்துவர் உதவியுடன் வழங்கினர். மேலும், மருத்துவர் மாணவிகளுக்கு உடல் நலன் குறித்து சில அறிவுரைகளை வழங்கினர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறுதானியங்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோவை, ஆக.19

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறுதானியங்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்களைத் தயாரிக்கும் பயிற்சி 22.8.23 மற்றும் 23.8.23 ஆகிய நாட்களில் நடைபெறும்.

சிறு தானிய வகைகளான கேழ்வரகு, கம்பு, சோளம், சாமை, தினை, பனிவரகு போன்றவை மக்களால் உணவில் ஓரளவு சேர்த்துக் கொள்ளப்படுகிறது. நகர்ப்புறங்களில் கேழ்வரகு மட்டும் பயன்பாட்டில் உள்ளது. சிறு தானிய வகைகளில் உள்ள சத்துக்களையும் அவற்றை உபயோகித்து தயாரிக்கப்படும் கீழ்க்காணும் மதிப்புஓட்டப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்படவுள்ளது. அவையாவன

- பாரம்பரிய உணவுகள்
- பிழிதல்
- அடுமனைப்பொருட்கள்
- உடனடி தயார்நிலை உணவுகள்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500/- + GST 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

பயிற்சியானது, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், (வாயில் எண். 7, மருதமலை சாலை), கோயம்புத்தூர் - 641 003 நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயபுத்தூர் - 641003. அலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# திருச்சி மாவட்டத்திற்கான வானிலை முன்னறிவிப்பு

திருச்சி, ஆக.19

இன்று முதல் 23.8.23 வரையில் ஆன 3 நாள் மிதமானது முதல் கனமான மழை வரை எதிர்பார்க்கப்படுகிறது. சராசரி ஈரப்பதம் (காலை & மாலை), அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே (60.0% & 32.0%), 37.0°C மற்றும் 26.0°C என எதிர்பார்க்கப்படுகிறது. மழை பொழியக்கூடிய மேகங்கள் ஆங்காங்கே காணப்படும். காற்றின் வேகம் சராசரியாக மணிக்கு 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். மேற்கு திசையில் காற்று வீசக்கூடும்.

வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளில் வெளிபுற ஒட்டுண்ணிகளை நீக்க 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து ஆடுகளின் வெளிப்புறங்களில் பூச வேண்டும். கறவை மாடுகளை ஐந்து முதல் எட்டு நிமிடங்கள் வரை நன்றாக கறந்து விட வேண்டும். இதனை பின்பற்றுவதன் மூலம் ஆக்ஸிடாக்சின் ஹார்மோன் சுரப்பு சீராக இருக்கும். மேலும் மடிவீக்க நோய் வராமல் தடுக்க இயலும். காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் கோழிகளின் தீவனங்கள் சிதற வாய்ப்புள்ளது. கோழிகளுக்கு குளிர் காய்ச்சல் கூட ஏற்பட வாய்ப்புள்ளதால் கோழி கூடாரங்களை சுற்றிலும் அடைத்தவாறு கோணிப்பைகளை கட்டி தொங்கவிடவும். நெற்பயிரில் இலைமடக்கு புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்த நடவுசெய்த 37, 44 மற்றும் 51 நாட்களில் ஏக்கருக்கு 2.5 சிசி என டிரைக்கோகிரம்மா ஒட்டுண்ணியை மூன்று முறைவிடவும்.

குறிப்பு : இந்த ஒட்டுண்ணி அட்டையை கட்டுவதற்கு ஒரு முன்போ அல்லது பின்போ எந்த ஒரு பூச்சிக்கொல்லி மருந்துகளையும் தெளிக்ககூடாது. கரும்பில் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த மாலத்தியான் மருந்தினை 2மி.லி/லிட்டர் என்றளவில் தெளிக்கவும்.

மேலும் விவரங்களுக்கு மேகதூட் செயலியை பதிவிறக்கம் செய்யுங்கள் என திருச்சிராப்பள்ளி, சிறுகமணி, மாவட்ட வேளாண் வானிலை மையம் (DAMU), வேளாண்மை அறிவியல் நிலைய சேர்ந்த திட்ட ஒருகிணைப்பாளர் முனைவர் ப முரளி அர்த்தநாரி, வேளாண் காலநிலையியல் துறை தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் வே குகன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

# ஒருங்கிணைந்த பண்ணைய செயல்பாடுகளை அறிந்த காந்திகிராம பல்கலை. வேளாண் மாணவிகள்



திருச்சி, ஆக.19

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் நடத்திய இடைமுகப் பணிமனை திருச்சி கலையரங்கத்தில் 18.8.23 மற்றும் 19.8.23 அன்று வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறையின் துணை இயக்குநர் கு.சரவணன் தலைமையில் நடைபெற்றது. இதில் திண்டுக்கல் காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக இளநிலை வேளாண்மை இறுதியாண்டு படிக்கும் மாணவிகள் ரா.தர்ஷினி, சாட்லா திவ்ய வாணி, கொ.ச.சிந்து, மு.வீரபத்மஸ்ரீ ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றிய தகவல்கள் மற்றும் பயன்கள் குறித்து விவசாயிகளிடம் உரையாற்றினர். ஒருங்கிணைந்த பண்ணையம், அதன் கூறுகள், நன்மைகள் பற்றி உரையாடினர். மேலும், ஒருங்கிணைந்த பண்ணையில் தேனீ வளர்ப்பு பற்றியும் அதன் நன்மைகள் பற்றி விவசாயிகளுடன் உரையாற்றினர்.



# பரமத்தி வேலூரில் வாழைத்தார் விலை உயர்வு

நாமக்கல், ஆக.19

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் பகுதிகளில் பூவன் வாழை, பச்சநாடன், ரஸ்தாலி, கற்பூரவள்ளி, மொந்தன் உள்ளிட்ட பல்வேறு வாழைகளை விவசாயிகள் பயிர் செய்து உள்ளனர். வாழைத்தார் முதிர்ச்சி அடைந்ததும் வெட்டி உள்ளூர் பகுதிகளுக்கு வரும் வியாபாரிகளுக்கும், பரமத்தி வேலூர் பஸ் நிலையம் அருகே செயல்பட்டு வரும் தினசரி வாழைத்தார் ஏல மார்க்கெட்டிற்கும் கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

வாங்கிய வாழைத்தார்கள் வியாபாரிகள் நாமக்கல், சேலம், கரூர், திண்டுக்கல், மதுரை, ஈரோடு, கோவை, நீலகிரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், கர்நாடகா, கேரளா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், தினந்தோறும் லாரிகள் மூலம் அனுப்பி வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த வாரம் பூவன் வாழைத்தார் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.350-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.300-க்கும், பச்சநாடன் வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.300-க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.300-க்கும், மொந்தன் வாழைத்தார் ஒன்று ரூ.500-க்கும் வாங்கிச் சென்றனர்.

நேற்று முன்தினம் பூவன் வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.500-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.450-க்கும், பச்சநாடன் வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.450-க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.400-க்கும், மொந்தன் வாழைத் தார் ஒன்று ரூ.800-க்கும் விற்பனையானது. வாழைத்தார் வரத்து குறைவால் விலை உயர்ந்துள்ளது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# மண் வளம் காப்போம்

# அண்ணாமலை வேளாண் மாணவர்கள் பேரணி



கடலூர், ஆக.19

சுத்துக்குழி அருகே பூதவராயன் பேட்டை அண்ணாமலை பல்கலைக் கழக இறுதியாண்டு இளங்கலை வேளாண் புல B - 8 குழுவை சேர்ந்த 11 மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவத் திற்காக புவனகிரி ஒன்றியம் சுத்துக்குழி கிராமத்தில் தங்கி பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக சுத்துக்குழி அருகே உள்ள பூதவராயன்பேட்டை ஊராட்சி




ஒன்றிய நடுநிலை பள்ளியில் 'மண் வளம் காத்தல்' என்ற தலைப்பில் விழிப்புணர்வு பேரணி நடத்தினர். பேரணியில் தலைமை ஆசிரியை விசாலாட்சி, ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் வேளாண் மாணவர்களுடன் இணைந்து பேரணி நடத்தினர்.

மாணவர்கள் குழு தலைவர் ரா.லோகேஷ் (மாணவ குழு தலைவர்) மண் வளம் குறித்து உரையாற்றினார். பள்ளி மாணவர்கள் அனை வரும் பேரணியாக சென்று மண் வளம் காத்தல் பற்றியும் இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் பொருட்டு கோசங் கள் எழுப்பினர். நெகிழி பயன்பாட்டை குறைத்தல், மறு சுழற்சி செய்தல், ரசாயன பூச்சிக்கொல்லி தவித்தல், மரம் வளர்த்தல், மழை நீர் சேகரித்தல் முதலிய கருத்தை வலியுறுத்தி மாணவர்களிடமும் கிராம மக்களிடமும் லோகேஷ்.R, சஞ்சய்குமார்.M.S, மதன்ராஜ்.R, மாதவன்.M, மதியழகன்.R, மகாவிஷ்ணு.T, மகேஸ்வரன்.S, மணி பாரதி.J, மணிபாரதி.M, மனோஜ்.S, மாதேஷ்.S, ஆகியோர் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க மானியம்

ஈரோடு, ஆக.19

ஈரோடு மாவட்டம், கொடுமுடி தோட்டக்கலைத் துறையின் மூலம் (2023-24 ம் ஆண்டு) பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனத் திட்டத்தின் மூலம் விவசாயிகளின் தோட்டத்தில் அனைத்து பயிர்களுக்கும் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. புதிதாக சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க சிறு-குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும் (எக்டருக்கு ரூ 135855) பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீதமும் (எக்டருக்கு ரூ.105530) மானியம் வழங்கப்படுகிறது. மேலும், சாகுபடி செய்யப் பட்டிருக்கும் பயிர் மற்றும் இடைவெளிக்கு தகுந்தாற் போல் மானியத் தொகையானது மாறுபடுகிறது. ஏற்கனவே, சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து 7 வருடங்கள் முடிந்திருந்தால் மறுபடியும் விவசாயிகள் சொட்டு நீர்ப்பாசனம் புதிதாக அமைக்க மானியம் தோட்டக்கலைத்துறை மூலம் வழங்கப்படுகிறது. சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து 7 வருடங்களுக்கு பிறகு Emitting Pipes என்றழைக்கப்படும் பக்கவாட்டு குழாய்கள் மட்டும் மாற்றிக் கொள்ளவும் மானியம் வழங்கப்படுகிறது. சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள் சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதற்கு தமிழ் நாடு அரசால் அங்கீகரிக்கப் பட்டுள்ள சொட்டு நீர்ப்பாசன நிறுவனத்தை தேர்வு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், விவசாயிகள் சிட்டா, அடங்கல், ஆர்.எஸ்.ஆர், கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்படும் நிலவுடைமைச் சான்று, நில வரைபடம், கூட்டு வரைபடம், ஆதார் கார்டு நகல், குடும்ப அட்டை நகல், பாஸ்போர்ட் சைஸ் போட்டோ-2 எண்கள், தண்ணீர், மண் ஆய்வு முடிவுகள், தாசில் தாரால் வழங்கப்படும் சிறு/குறு விவசாயி சான்று (சிறு/குறு விவசாயிகளுக்கு மட்டும்), கூட்டு சிட்டாவாக இருந்தால் பத்திர நகல் போன்ற ஆவணங்களுடன் tnhorticulture.tn.gov.in micro irrigation MIMIS என்ற இணைய தளத்தில் பதிவு செய்யுமாறு கொடுமுடி தோட்டக்கலை உதவி இயக்குநரால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் விபரங்களுக்கு தியாகராஜன் 99423 71144, இராமசந்திரன் 94885 63602, மணிவண்ணன் 85265 35765, சண்முகம் 87542 15625 தொடர்பு கொள்ளுங்கள்.


MICRONOL®
அனைத்துப் பயிர்களில் அதிக மகசூல் பெற
போரானால்
(போரான் (B) - 20%)
MICRONOL
BORONOL
BORON (B) - 20%
FULLY SOLUBLE MICRONUTRIENT
FOLIAR FERTILIZER
For Agricultural use only
தெளியுங்கள்
ISO 9001 : 2015
LINGA CHEMICALS
Customer Care: 0452 - 2321722

# சத்தியமங்கலத்தில் பூக்கள் விலை கடும் உயர்வு

ஈரோடு, ஆக.19

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் சுற்றுவட்டார பகுதிகளில் மல்லி, முல்லை, சம்பங்கி, செண்டு மல்லி, கோழி கொண்டை உள்ளிட்ட பல்வேறு வகையான மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

இங்கு விளையும் பூக்கள் விவசாயி களால் நடத்தப்படும் சத்தியமங்கலம் பூ மார்க்கெட்டில் ஏலம் முறையில் விலை நிர்ணயம் செய்யப்பட்டு ஈரோடு, கோவை, திருப்பூர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு நகரங்களுக்கும், கேரளா, கர்நாடகா ஆந்திரா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இந்நிலையில் தற்போது ஆவணி மாதம் வளர்பிறை முகூர்த்த சீசன் தொடங்கி உள்ளது. இதன் காரணமாக விசேச நாட்களை முன்னிட்டு பூக்களின் தேவை அதிகரித்துள்ளது.

சத்தியமங்கலம் பூ மார்க்கெட்டில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு சம்பங்கி பூ ஒரு கிலோ ரூ.100-க்கு விற்ற நிலையில் நேற்று முன்தினம் இரு மடங்கு உயர்ந்து ஒரு கிலோ ரூ.220-க்கு விற்பனையானது.

இதேபோல் மல்லிகை பூ ஒரு கிலோ ரூ.600-க்கும், முல்லைப் பூ ஒரு கிலோ ரூ.250-க்கும், கோழி கொண்டை ஒரு கிலோ ரூ.130-க்கும், செண்டு மல்லி ஒரு கிலோ ரூ.92-க்கும் விற்பனையானது.

சம்பங்கி பூக்கள் இரு மடங்கு விலை உயர்ந்தாலும், மற்ற பூக்களுக்கும் நல்ல விலை கிடைத்ததால் பூக்களை விற்பனைக்கு கொண்டு வந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.



# வெள்ளத்தை தாங்கி வளரும் நெல் ரகங்கள் தெரியுமா?



கடலோர மாவட்டங்களிலும் டெல்டா மாவட்டங்களிலும் இயற்கை சீற்றத்தால் வெள்ளம் போன்ற பாதிப்பை தாங்கி வளரக்கூடிய நெல் இரகங்கள் என்ன என்பதை பார்ப்போம்.

**நெல் ரகங்கள் என்ன என்ன?**

மழை வெள்ளத்தை தாங்கியும் இரண்டு வாரத்திற்கு மேல் தண்ணிர் தேங்கி இருந்தாலும்கூட நல்ல மகசூல் தரக்கூடிய நெல் இரகங்களில் கோ43 (சப்1), ஸ்வர்ணா சப் 1, எம்டியூ 1001, சாவித்திரி போன்ற இரகங்கள் உள்ளன. சில ஆண்டுகளுக்கு முன் அறிவிக்கபட்ட காரைக்கால் நெல்-2 வெள்ளத்தை தாங்கி வளரக்கூடியது.

**காரைக்கால் (நெல்) 2-ன் சிறப்பியல்புகள் என்ன?**

இந்த ரகமானது ஆடுதுறை 46 மற்றும் ஸ்வர்ணா சப் 1 இரகங்களை பயன்படுத்தி, மறு ஓட்டு சேர்க்கையில் உருவாக்கப்பட்டது. சம்பா மற்றும் தாளடி பருவங்களுக்கு ஏற்றது. வடகிழக்கு பருவ மழையின் போது ஏற்படும் வெள்ளத்தை தாங்கி வளர்வதுடன் தாழ்வான பகுதிக்கு ஏற்றது. இது தூர் கட்டும் பருவத்தில் மழை நீரில் முழ்குவதாலோ அல்லது நீர் தேங்குவ தாலோ எற்படும் பாதிப்புகளை (இரண்டு வாரம் வரை) தாங்கி வளரும் தன்மை உடையது. இதனுடைய வயது 135-140 நாட்களே. வெள்ளை நீண்ட சன்ன ரக அரசி தர வல்லது. இந்த கே.கே (ஆர்) 2 அதிக அரவை திறன் (72%) குலை நோய் மற்றும் செம்புள்ளி நோய் (LEAF SPOT DISEASE) எதிர்ப்பு திறனுடன் பழுப்பு புகையான் மிதமான எதிர்ப்பு திறன் கொண்டது. மகசூலை பொருத்தவரை இயல்பான நிலையில் 6850 கிலோ/ஹெக்டர் மகசூலும் வெள்ளம் பாதித்த நிலையில் 3600 கிலோ/ஹெக்டர் மகசூல் கிடைப்பதாக இதனை உருவாக்கிய பண்டித ஜவஹர் லால் நேரு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், காரைக்கால், பாண்டிசேரி தெரிவித்து உள்ளது. விபரங்களுக்கு 04368-261372 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும். வெள்ளம், மழையாக இருந்தாலும் மகசூல் பாதிப்பு இல்லாத இரகத்தை டெல்டா மற்றும் கடலோர மாவட்டங்களில் நட்டு நல்ல மகசூல் எடுப்போம்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# நெல், மக்காசோளம், நிலக்கடலை பண்ணை பள்ளி விவசாயிகளுக்கான சாகுபடிக்கு முன் ஆயத்த கள பயிற்சி




விருதுநகர், ஆக.19

விருதுநகர் மாவட்டத்தில் ரீலையன்ஸ் பவுண்டேசன் சார்பில் 18.8.23 அன்று நெல், மக்காசோளம் மற்றும் நிலக்கடலை டிஜிட்டல் பண்ணை பள்ளி விவசாயிகளுக்கு சாகுபடி ஆயத்த களப்பயிற்சி அத்திகுளம் தெய்வேந்திரி, (ஸ்ரீவில்லிபுத்தூர்), கிருஷ்ணன் கோவில் (வத்ராப்), செம்பட்டி பெரிய தும்பக்குண்டு






(அருப்புக்கோட்டை), கத்தாளம்பட்டி( எம்.ரெட்டியாபட்டி) போன்ற கிராமங்களில் சாகுபடிக்கான ஆயத்த கட்ட பயிற்சி நடை பெற்றது.

இந்த பயிற்சியை துவக்கி வைத்து பேசிய மாவட்ட திட்ட மேலாளர் ஸ்ரீகிருபா பேசுகையில். தென்மேற்கு பருவமழையை எதிர்பார்த்து இருக்கின்ற நேரத்துல விவசாயிகள் விதைப்பு தயாராக இருக்கும் போது செய்ய வேண்டிய ஆயத்த பணிகளால் நமக்கு எதிர்பார்த்த மகசூல் கிடைக்கும் என்பதுடன் இந்த செலவில்லாத தொழில்நுட்பங்களை பயன்படுத்திட தான் இந்த மாதிரியான களப்பயிற்சி நடத்தப்படுவதாக தெரிவித்தார்.

ஏற்கனவே மண் மாதிரி எடுக்கப்பட்ட பண்ணை பள்ளி விவசாயிகள் மண் மாதிரி முடிவுகளை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தொழில்நுட்ப பயிற்சியாளராக சந்திர சேகரன் கலந்து கொண்டு கூறுகையில் தரமான விதையை தேர்வு செய்வதுடன் விதைநேர்த்தி மற்றும் சத்தூட்டிய தொழு உரம் (EN-RICHED FARM YARD MANURE) தயாரிப்பு போன்ற தொழில் நுட்பங்களையும் விதைகடினப்படுத்தல் (SEED HARDNING) மற்றும் மழையை எதிர்பார்த்து விதைப்பு (PRE MONSOON SOWING) முறைகளை பற்றி விரிவாக எடுத்துக்கூறினார். உரம் இடும்போது மண்பரிசோதனை பரிந்துரைபடி நிலத்தில் ஈரம் இருக்கும் போது உரமிட வேண்டும் என்றார் பரிந்துரைக்கப்பட்ட நுண்ணூட்ட சத்துகளை கடைசி உழவில் இட வேண்டுமாய் விவசாயிகளை கேட்டுக்கொண்டார். இந்த நிகழ்வில் தேவ பிரியம், கமலேஷ், நெல்சன், தமிழ் செல்வன், விநாயகம், கருப்பையா, பானுமதி, விஜயா, மல்லையா, பாக்கிய ராஜ், பெருமாள் ஊராட்சி தலைவர் கெங்கையன் உட்பட பண்ணை பள்ளி விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக் கான ஏற்பாடுகளை கள அலுவலர் வேம்புலு சிறப்பாக செய்திருந்தார்.



# விவசாயிகளுக்கான இரண்டு நாள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம்



திருச்சி, ஆக.19

மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி சார்பில் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டாரத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் தமிழ்நாடு தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இணைந்து விவசாயிகளுக்கான இரண்டு நாள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி முகாம் ஆகஸ்ட் 17 மற்றும் 18, 2023 ஆம் தேதிகளில் நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமில், மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் இணை இயக்குனர் சி.இளங்கோவன், பயிற்சியை பற்றிய தொடக்க உரையாற்றினார். அதனை தொடர்ந்து ஆத்தூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் டி.எஸ்.பி. அலெக் ஸாண்டர், இப்பயிற்சியில் கலந்து கொண்டு இப்பயிற்சியை பற்றிய சிறப்புரையாற்றினார். மேலும், மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் உதவி இயக்குனர் முனைவர் ச.சிவராம கிருஷ்ணன், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பற்றிய வழிமுறை களை விவசாயிகளுக்கு எடுத் துரைத்தார். மேலும், பயிர் பாதுகாப்பு அலுவலர் முனைவர் இரா.கோவிந்தராஜ், காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி/நோய் மேலாண்மை பற்றி விளக்க உரையாற்றினார்.

இப்பயிற்சியில் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் பயிர் பாதுகாப்பு அலுவலர்கள் விவசாயிகளுக்கு விதை நேர்த்தியின் முக்கியத்துவம், வயல் சூழல் ஆய்வின் முக்கியத்துவம், நன்மை மற்றும் தீமை செய்யும் பூச்சிகளை இனம் கண்டறிதல், உயிரியல் முறையில் பூச்சிகள் மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள், இரசாயண பூச்சிக்கொல்லிகளால் ஏற்படும் பாதிப்புகள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பில் பல்வேறு பொறிகளின் பயன் பாடு, தாவரம் மற்றும் வேம்பு சார்ந்த பூச்சி விரட்டிகள் தயாரிக்கும் முறைகள், பாதுகாப்பான முறையில் இரசாயன பூச்சிக்கொல்லி களை பயன்படுத்துவது பற்றியும் இந்த இரண்டு நாட்கள் பயிற்சி யில் விளக்கினர். பயிற்சியின் முடிவில் உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் என்.கஸ்தூரி நன்றியுரை ஆற்றினார். இப்பயிற்சியில் ஆத்தூர் வட்டாரத்தை சேர்ந்த 54 விவசாயிகள் பங்குபெற்று பயனடைந்தனர்.

# விவசாயிகள் கடன் அட்டை பெற கிருஷ்ணகிரி வட்டாரத்தில் விழிப்புணர்வு முகாம்

## பயன் பெற வேளாண்மை உதவி இயக்குநர் அழைப்பு

கிருஷ்ணகிரி, ஆக.19

கிருஷ்ணகிரி வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் வங்கி கடன் உதவி பெற 'கிசான் கடன் அட்டை' எளிதில் பெறுவதற்கு வழிவகை செய்யும் பொருட்டு மாவட்ட ஆட்சியர் சரயு, ஆணைப் படியும், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) கிருஷ்ணன், அறிவுரைகளின் படியும், வேளாண்மைத்துறை, தோட்டக்கலை துறை அலுவலர்கள் மற்றும் வங்கி பிரதிநிதிகள் இணைந்து 'கே.சி.சி விழிப்புணர்வு முகாம்' வருகின்ற ஆகஸ்டு 22, 23, 24 ஆகிய தினங்களில் சிறப்பு முகாம் அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது. அதன் படி, ஆகஸ்டு 22–ஆம் தேதியில் நாரலப்பள்ளி, கொண்டேபள்ளி, பெத்ததாளப்பள்ளி, இ.அகரம், சோக்காடி, வெலகலஹள்ளி, கெங்கலேரி, கோதிகுட்லப்பள்ளி, காட்டி நாயனப்பள்ளி ஆகிய கிராம பஞ்சாயத்து அலுவலகங்களிலும், 23–ஆம் தேதி கம்மம்பள்ளி, கூலியம், கல்லுகுறுக்கி, மாரிக்கம் பள்ளி, பெல்லாரம்பள்ளி, பச்சிகானப்பள்ளி, செம்பட முத்தூர் அகசிப்பள்ளி, கொத்தப்பேட்டா ஆகிய கிராம பஞ்சாயத்து அலுவலகங்களிலும், 24ஆம் தேதி பெரிய கோட்டப்பள்ளி, பெல்லம்பள்ளி, ஆலப்பட்டி, மோரமடுகு, தண்டேகவுண்டன ஹள்ளி, கொம்பள்ளி, தேவசமுத்திரம், கட்டிகானப்பள்ளி ஆகிய கிராம பஞ்சாயத்து அலுவலகங்களிலும் விவசயிகள் கடன் அட்டை பெற விழிப்புணர்வு முகாம் நடைபெறவுள்ளது. அது சமயம தகுதியுள்ள விவசாயிகள் திரளாக பங்கு பெற்று பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

இத்திட்டத்தின் சிறப்பம்சம் ரூபாய் ஒரு லட்சத்து அறுபதாயிரம் வரை எந்த ஒரு பிணையமும் இன்றி வங்கி கடன் பெறலாம். பயிர் சாகுபடி செய்ய தேவையான இடு பொருட்கள் வாங்கவும், ஆடு மாடு பராமரிக்க தேவையான செலவிற்காகவும் கடன் வழங்கப்படுகின்றது. தங்களுக்கு தேவையான தொகையை மட்டுமே எடுத்துக் கொள்ளவும் வசதியுள்ளது. அதற்குரிய வட்டியை மட்டுமே செலுத்துவது போதுமானது. எனவே, தேவை யற்ற தொகைக்கு வட்டி செலுத்துவது அவசியமின்றி செலவு மிச்சப்படுத்தப்படுகின்றது.

உரிய நேரத்திற்குள் கடன் திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி விகிதமும் 4 சதவிகிதமாக மட்டுமே உள்ளதால், விவசாயிகள் வட்டி செலவை குறைத்து அதிக லாபம் பெற இயலும். இத்திட்டத்தில் பயன் பெற வேறு எந்த வங்கியிலும் கிசான் அட்டை அல்லது பயிர்க்கடன் பெற்று இருக்கக்கூடாது. தங்களது ஆதார் அட்டை நகல், சிட்டா (தங்கள் பெயரிலேயே நிலம் இருக்க வேண்டும்), வங்கி கணக்கு புத்தக நகல், பேன் எனப்படும் நிரந்தர கணக்கு எண் (இருந் தால்), பாஸ்போர்ட் அளவு புகைப்படம் போன்றவற்றுடன் கடன் அட்டை பெற தேவையான விண்ணப்பத்தினை நிரப்பி முகாமில் வழங்க வேண்டும் எனவும், இந்த அரிய வாய்ப்பினை விவசாயிகள் விடுபடாமல் பயன்படுத்திக் கொள்ளுமாறும் கிருஷ்ணகிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சுரேஷ்குமார் கேட்டுக் கொண்டார்.




# வேளாண் மாணவிகள் தேனீ தினம் கொண்டாட்டம்



திண்டுக்கல், ஆக.19

திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம பல்கலை இளங்கலை வேளாண்மை பட்டப் படிப்பு இறுதியாண்டு மாணவிகள் விவேதா, ஆர்ய லக்ஷ்மி, தாராலக்ஷ்மி, அனு பாபு, பிரவீணா ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தில் சீப்பாலக்கோட்டை, தேனியில் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக தேசிய தேனீக்கள் தினத்தை சீப்பாலக் கோட்டையில் கொண்டாடினர். அதில் பெண்களுக்கு விவசாயத்தில் தேனீயின் முக்கியத்துவம், தேனீ வளர்ப்பு, தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் வரும் தேனீ வளர்ப்பு திட்டம், மற்றும் தேன் மதிப்பூட்டல் குறித்து விளக்கினர். மேலும் தொழில் முனைவோரான ஸ்ரீமதி பிரீத்தி தேனில் மதிப்பூட்டல் செய்த பீ வாக்ஸ் கிரீம், சோப், லிப் பால்ம் ஆகியவற்றை குறித்தும் விளக்கினார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப்பகுதி விதைப்பண்ணைகளில் விதைச்சான்று உதவி இயக்குநர் ஆய்வு



ஈரோடு, ஆக.19

ஈரோடு மாவட்டம், தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசனப் பகுதியில் ஈரோடு, திருப்பூர், நாமக்கல் மற்றும் கோயமுத்தூர் மாவட்டங்களைச் சார்ந்த தனியார், அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள் விதைப்பண்ணைகள் அமைத்து உள்ளனர். இவ்விதைப்பண்ணைகளை ஈரோடு விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர் சு.மோகனசுந்தரம் ஆய்வு செய்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது, விதை உற்பத்தியாளர்கள் இப்பகுதியில் நெல் ஏடிடி37, ஏஎஸ்டி16, டிபிஎஸ்5, எம்டியு1010, என்எல்ஆர்34449 ஆகிய இரகங்களின் வல்லுநர் மற்றும் ஆதாரநிலை ஒன்று விதைகளைக் கொண்டு விதைப்பண்ணை களை அமைத்துள்ளனர். இவ்விதைப்பண்ணைகள் தற்போது பூப்பருவம் முதல் அறுவடை நிலை வரை உள்ளது. இவ்விதைப் பண்ணைகளின் வயல் தரம் ஆய்வு செய்யப்பட்டு சாகுபடி யாளர்களுக்கு பயிர் பாதுகாப்பு மற்றும் அறுவடை தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சியளிக்கப்பட்டது என தெரிவித்தார்.

மேலும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தால்; தற்போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நெல் இரகங் களான ஏஎஸ்டி21, கோ54, கோ55 மற்றும் ஏடிடி57 இரகங் களின் உண்மைநிலை மாதிரி விதைப்பண்ணைகளும் ஆய்வு செய்யப்பட்டு ஈரோடு மாவட்ட விதைச்சான்று அலுவலர்கள் மற்றும் கோபிசெட்டிபாளையம் உதவி விதை அலுவலர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



HEALTHY CROPS
HAPPY FARMER
SATHYAM Agro Clinic
QUALITY PRODUCT
சத்யம் அக்ரோ கிளினிக்
விதை முதல் விற்பனை வரை
வேளாண் மருத்துவ மையம்
சத்யம் விவசாயிகள் கிளப்
SATHYAM FARMERS CLUB
விதை முதல் விற்பனை வரை
விவசாயத்திற்கு தேவையான அனைத்தும் ஒரே இடத்தில்
சத்யம் அக்ரோ கிளினிக்
சத்யம் விவசாயிகள் கிளப் சிறப்பம்சங்கள்
• பயிர்களுக்கேற்ப மாதம் ஒருமுறை அல்லது இருமுறை கள ஆய்வு
• விற்பனை விலையிலிருந்து 50% விலை குறைந்து கொடுக்கப்படும்.
• காலை 10 மணிமுதல் மாலை 6 மணி வரை விவசாய ஆலோசனை வழங்கப்படும்.
• உரமிடுதல் பணியில் விவசாய பணியாளர் கூலியில் 50% பங்களிப்பு.
• விவசாய நிலங்களுக்கு இலவச மண் மற்றும் நீர் பரிசோதனை.
• விளைபொருட்களை அறுவடை செய்ய உதவி.
• விளைபொருட்கள் நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும்.
SATHYAM GROUP OF COMPANIES
Corporate Office : Ellis Nagar, Madurai - 625 016, Tamilnadu, India.
Unit - 1: Melamathur, Madurai - 625 234, Tamilnadu, India.
Unit - 2: Vadipatti, Madurai - 625 218, Tamilnadu, India.
For More Details Contact us: +91 75508 75508
Mail us : sales@sathyamagroclinic.com
www.sathyamagroclinic.com

# சேலம் மாவட்டம், தாதகாபட்டி, உழவர் சந்தை 19-8-23 காய்கறிகள் விலை விபரம்

(ரூ/கிலோ)

| | |
|---|---|
| 1. தக்காளி | ரூ.35-30 |
| 2. உருளைக் கிழங்கு | ரூ.35-58 |
| 3. சின்ன வெங்காயம் | ரூ.48-50 |
| 4. பெரிய வெங்காயம் | ரூ.35-38 |
| 5. பச்சை மிளகாய் | ரூ.46 |
| 6. கத்தரி | ரூ.24-28 |
| 7. வெண்டைக்காய் | ரூ.15-16 |
| 8. முருங்கைகாய் | ரூ.30-40 |
| 9. பீர்க்கங்காய் | ரூ.30-35 |
| 10. சுரக்காய் | ரூ.20-25 |
| 11. புடலங்காய் | ரூ.20-22 |




| | |
|---|---|
| 12. பாகற்காய் | ரூ.35-40 |
| 13. தேங்காய் | ரூ.25-28 |
| 14. முள்ளங்கி | ரூ.14-15 |
| 15. பீன்ஸ் | ரூ.58 |
| 16. அவரை | ரூ.50-50 |
| 17. கேரட் | ரூ.66-70 |
| 18. வெற்றிலை | இல்லை |
| 19. மாங்காய் | இல்லை |
| 20. வாழைப்பழம் | ரூ.30-45-55 |
| 21. கீரைகள் | ரூ.20-24 |
| 22. பப்பாளி | ரூ.24 |
| 23. கொய்யா | ரூ.30-40 |
| 24. சப்போட்டா | இல்லை |
| 25. மாதுளை | ரூ.120 -150 |
| 26. சாத்துக்குடி | ரூ.70 |

தகவல் : நிர்வாக அலுவலர், உழவர் சந்தை, தாதகாபட்டி, சேலம் மாவட்டம்.

# சுதந்திர தின விழாவில் அண்ணாமலை பல்கலை வேளாண் மாணவிகள்



கடலூர், ஆக.19

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இளங்கலை வேளாண்மை இறுதி ஆண்டு பயிலும் G3 குழுவை சார்ந்த மாணவிகள் 16 பேர், பல்கலைக்கழக இணை பேராசிரியர் முனைவர் வி.சக்திவேல் வழிகாட்டுதலின்படி, பரங்கிப்பேட்டை அடுத்த அகரம் கிராமத்தில் 2 1/2 மாதங்கள் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி தேசிய நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் நாட்டின் 77 வது சுதந்திர தினத்தை கொண்டாடினர். விழாவில் நடன நிகழ்ச்சிகள், பேச்சு போட்டிகள் ஆகியவை இடம் பெற்றன.



# கோவை மாவட்டம், பொள்ளாச்சி, தேங்காய் 18-8-23 விலை விபரம்

| | | |
|---|---|---|
| 1 தேங்காய் பச்சை | (1 டன்) | 22000 |
| 2 தேங்காய் கசங்கள் | (1டன்) | 23000 |
| 3 தேங்காய் கருப்பு | (1 டன்) | 23500 |
| 4 கொப்பரை பருப்பு | (1kg) | 77 |
| 5 தேங்காய் எண்ணெய் காங்கேயம் | (15Kg) | 1710 |
| 6 சுத்தமான செக்கு எண்ணெய் (1) | லிட்டர் | 200 |
| 7 உரிம மட்டை பச்சை (1000) | | 450 |
| 8 உரி மட்டை கருப்பு (1000) | | 200 |






| | | |
|---|---|---|
| 9 தொட்டி களம்(1 டன்) | | 8000 |
| 10 பச்சை இளநீர் | (1) | 25 |
| 11 ஆரஞ்சு இளநீர் | (1) | 25 |
| 12 தென்னை ஈக்கி தரம் | (1) (1Kg) | 30 |
| **கோவை** | | |
| 13 பச்சைக்காய் | (1 டன்) | 22500 |
| 14 கருப்பு காய் | (1டன்) | 23500 |
| **உடுமலை** | | |
| 15 பச்சைக் காய் | (1டன்) | 21000 |
| 16 கருப்பு காய் | (1டன்) | 22500 |


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பழவகை ஒட்டுச்செடிகள் மானிய விலையில் வழங்கல்

ஈரோடு, ஆக.19

ஈரோடு மாவட்டம், கொடுமுடி தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையின் மூலம் 2023-24 ம் ஆண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் மாநில தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் ஆகிய திட்டங்களில் பழவகை ஒட்டுச்செடிகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. கொய்யா, மா, மாதுளை, சப்போட்டா மற்றும் எலுமிச்சை போன்ற பழவகை செடிகள் தொகுப்பாக வழங்கப்படுகிறது. தொகுப்பு ஒன்றின் விலை ரூ.200 ஆகும். அரசின் மானியம் நீங்கலாக ரூ.50 செலுத்தி மேலே குறிப்பிடப்பட்டுள்ள செடிகளை பெற்றுக் கொள்ளலாம். மேலும், இத்திட்டங்களில் பயன் பெற விரும்பும் விவசாயிகள் மற்றும் பயனாளிகள் ஆதார் கார்டு நகல் மற்றும் பாஸ்போர்ட் அளவுள்ள போட்டோவுடன் https://tnhorticulture.tn.gov.in/kit_new/Kit www.tnhorticulture.tn.gov.in/kit என்ற இணைய தளங்களில் பதிவு செய்து தோட்டக்கலைத் துறை மூலம் பழவகை செடிகள் தொகுப்பை பெற்றுக் கொள்ளலாம். வீட்டு கொள்ளைபுரத்தில் 5 செடிகள் வளர்க்க போதுமான இடவசதி இருக்க வேண்டும். மேலும், மாநில தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வீட்டு மாடிகளில் வீட்டுக்கு தேவையான காய்கறி செடிகள் வளர்க்க தேவையான 6 பைகள், 6 வகையான காய்கறி விதைகள், மக்கிய தேங்காய் நார் கழிவுக் கட்டிகள், வேப்பெண்ணெய், அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, போன்ற பொருட்கள் அடங்கிய மாடி வீட்டுத் தொகுப்பு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. தொகுப்பு ஒன்றின் விலை ரூ.900 ஆகும். அரசின் மானியம் நீங்கலாக ரூ.450 செலுத்தி மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாடி தோட்ட தொகுப்பை பெற்றுக் கொள்ளலாம். மேலும், இத்திட்டங்களில் பயன்பெற விரும்பும் பயனாளிகள் ஆதார் கார்டு நகல் மற்றும் பாஸ்போர்ட் அளவுள்ள போட்டோவுடன் www.tnhorticulture.tn.gov.in/kit என்ற இணைய தளங்களில் பதிவு செய்து தோட்டக்கலைத் துறை மூலம் மாடி வீட்டுத் தொகுப்பை பெற்றுக் கொள்ளலாம். தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின் அங்கக முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு அங்கக இடுபொட்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. மேலும் விவசாயிகளுக்கு அங்கக சான்று தோட்டக்கலைத் துறை மூலம் பெற்று தரப்படும். பனை அபிவிருத்தி இயக்கம் திட்டத்தின் கீழ் பனை நாற்றுகள் மற்றும் பனை விதைகள் மானியத்தில் வழங்கப்படுகிறது.

# அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண் மாணவர்களின் பள்ளி தூய்மை பணி



கடலூர், ஆக.19

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இளங்கலை வேளாண்மை இறுதியாண்டு பயிலும் மாணவர்கள் (குழு – B3) 14 பேர் புவனகிரி அடுத்த பெருமாத்தூர் கிராமத்தில் முனைவர் B.சுதாகர் தலைமையில் தங்கி பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இப்பயிற்சியின் ஒரு பகுதியாக, பெருமாத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆண்கள் நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியை R.ராதிகா மற்றும் பள்ளி மாணவர்களுடன் இணைந்து பள்ளி மைதானம் மற்றும் சுற்றுச்சுவர் அருகில் உள்ள குப்பைகளையும், களைச் செடிகளையும் அகற்றினர். மேலும், பள்ளி மாணவர்களுக்கு தூய்மையின் அவசியத்தை பற்றியும்,மக்கும் மற்றும் மக்கா குப்பைகளுக்கு இடையேயான வேறுபாடுகள் குறித்தும் வேளாண் புல மாணவர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

